# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி - 628 503

## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

## நிறைவு விழா குறித்த செய்திகள்

**கோவில்பட்டி மே 26, 2019** (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்:

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் சிறப்பாக நடைபெற்றது.

பரிசளிப்பு விழா:

முதலிடம் பெற்ற **பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணிக்கு** இலட்சுமி அம்மாள் அகில இந்திய நினைவு ஹாக்கி கோப்பையுடன் ரூபாய் **1,00,000**-க்கான ரொக்கப் பரிசும், இரண்டாமிடம் பெற்ற **செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணிக்கு** நினைவு கோப்பையுடன் ரூபாய் **75,000**-க்கான ரொக்கப் பரிசும், மூன்றாமிடம் பெற்ற **சென்னை ஐ.சி.எப். அணிக்கு** நினைவு கோப்பையையும் ரூபாய் **50,000**-க்கான ரொக்கப் பரிசும் மற்றும் நான்காமிடம் பெற்ற **மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணிக்கு** நினைவு கோப்பையையும் ரூபாய் **30,000**-க்கான ரொக்கப் பரிசும் வழங்கபட்டது. மேலும் காலுறுதிப் போட்டியில் விளையாடிய புவனேஸ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே, சென்னை தெற்கு இரயில்வே, பெங்களூர் கனரா வங்கி, மும்பை யூனியன் வங்கி ஆகிய அணிகளுக்கு ஆறுதல் ரொக்கப் பரிசாக தலா ரூபாய் **20,000** வழங்கப்பட்டன.

மேலும் சிறந்த முன்கள ஆட்டக்காரருக்கான விருதை **பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்** அணி வீரர் **குஷா ஜெ பி கௌடா**-க்கும், சிறந்த நடுகள ஆட்டக்காரருக்கான விருதை **கர்நாடகா ஹாக்கி கூர்க்** அணி வீரர் **நாகேஷ்**-க்கும், சிறந்த தடுப்பு ஆட்டக்காரருக்கான விருதை **ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி** அணி வீரர் **ஜோசுவா வெசோகர்**-க்கும், சிறந்த வளர்ந்து வரும் வீரருக்கான விருதை **சென்னை தெற்கு இரயில்வே** அணி வீரர் **கார்த்தி**-க்கும், சிறந்த கோல் கீப்பர்க்கான விருதை **பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்** அணி வீரர் **செந்தமிழரசு**-க்கும், தொடரின் சிறந்த தொடர் நாயகன் விருதை **பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்** அணி வீரர் **அப்கரன் சுதேவ்**-க்கும் வழங்கப்பட்டது.

11 நாட்கள் நடைபெற்ற அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் பல்வேறு மாநிலங்களில் இருந்து 16 தலை சிறந்த அணிகள் பங்கேற்று விளையாடினர். அவை கனரா வங்கி - பெங்களூர், ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே - புவனேஷ்வர், சிஐஎஸ்எப் - சண்டிகர், தமிழ்நாடு போலீஸ் - சென்னை, பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் - பெங்களூர், ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி - மும்பை, சாய் - சென்னை, இந்தியன் வங்கி - சென்னை, சவுத் சென்ட்ரல் ரயில்வே - செகந்தராபாத், ஹாக்கி கூர்க் - கர்நாடகா, பிஇஜி & சென்டர் கிர்கீ - புனே, ஐசிஎப் - சென்னை, யூனியன் வங்கி - மும்பை, நேஷனல் ஹாக்கி அகாடமி - நியூடெல்லி, தெற்கு இரயில்வே - சென்னை மற்றும் லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி - கோவில்பட்டி, ஆகிய அணிகள் கலந்து கொண்டு விளையாடினர். இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டம் வரை லீக் முறையிலும், அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையிலும் நடைபெற்றது.

காலிறுதிப் போட்டிகளில் முறையே பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், சென்னை ஐ.சி.எப்., செகந்தராபாத் சவுத் சென்ட்ரல் இரயில்வே, மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி, ஆகிய அணிகள் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

முதல் அரை இறுதிப் போட்டியில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணியுடன் சென்னை ஐ.சி.எப். அணி மோதியது. இதில் 6:2 என்ற கோல் கணக்கில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் மும்பை, ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியுடன் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி மோதியது. இதில் 6:5 என்ற கோல் கணக்கில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

**மே 26ம் தேதி மாலை 7.15 மணியளவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணியுடன் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி மோதியது.**

**இப்போட்டியில் 5:2 என்ற கோல் கணக்கில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வெற்றிப் பெற்றது.**

14-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் முகமது ரஹீல் மௌசின் ஒரு பீல்டு கோல் போட்டார்.

18-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் குஷா ஜெ பி கௌடா ஒரு பீல்டு கோல் போட்டார்.

29-வது நிமிடத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் இன்னோசெண்ட் குல்லு பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

33-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் குஷா ஜெ பி கௌடா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

54-வது நிமிடத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் ரஞ்சன் ஐயப்பா ஒரு பீல்டு கோல் போட்டார்.

58-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் ஆஞ்நேயா அம்பிகரா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

60-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் குஷா ஜெ பி கௌடா பெனாலிட்டி ஸ்டோக் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. ராஜ்குமார் ஜா மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **மஞ்சித்,** பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர்.

(Refer Photo - LASA2019_26052019_ Final Match_Photo)

**மே 26ம் தேதி நடைபெற்ற மூன்றாம் மற்றும் நான்காம் இடத்திற்கான மற்றொரு போட்டியில் சென்னை ஐ.சி.எப். அணியுடன் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி மோதியது.**

**இப்போட்டியில் சென்னை ஐ.சி.எப். அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்தது. மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி நான்காமிடத்தைப் பெற்றது.**

**(முதலில் 2:2 என்ற கோல் கணக்கில் சென்னை ஐ.சி.எப். அணியும் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியும் சமநிலைப் பெற்றது. பின்பு ஸூட்அவுட் முறையில் 3:0 என்ற கோல் கணக்கில் சென்னை ஐ.சி.எப். அணி வெற்றி பெற்று பெற்றது.)**

9-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப். அணி வீரர் ரமேஷ் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

19-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப். அணி வீரர் ப்ருத்வி பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

30-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் விஷால் சிங் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

34-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் இல்தர் இஸ்ராட் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. அமித் ஷையினி மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **ப்ருத்வி,** ஐ.சி.எப்., சென்னை.

(Refer Photo - LASA2019_26052019_ 3rd & 4th Place_Photo)

**Annexure:** Winner_photo.jpg